## மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழக இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 14/08/2025 அன்று கலந்துகொண்ட அரசு மற்றும் கழக நிகழ்ச்சிகளின் புகைப்படத் தொகுப்பு.




● சேப்பாக்கம் மத்திய பக்கிங்காம் கால்வாயை ரூ.31 கோடி மதிப்பில் தூர்வாரும் பணிகளை, மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்களுடன் இணைந்து தொடங்கி வைத்தார்.





● பார்வை மாற்றுத்திறனாளிகளுக்கான சென்னை சிறுமலர் சிறப்புப்பள்ளி நூற்றாண்டு விழாவில் கலந்துகொண்டு, பள்ளி வளர்ச்சிக்கு நிதிப் பங்களிப்பு செய்ததுடன் மாணவர்களுக்குப் பரிசுகளையும் வழங்கி சிறப்புரையாற்றினார்.




● தயாளு அம்மாள் தொண்டு நிறுவனத்தில் பயிற்சி முடித்த மகளிர் மற்றும் இளைஞர்களுக்கு தையல் இயந்திரங்களையும், மடிக்கணினிகளையும் வழங்கினார்.





● துறைமுகம் சட்டமன்றத் தொகுதியில் மாண்புமிகு அமைச்சர் சேகர்பாபு அவர்களது தொகுதி மேம்பாட்டு நிதியில் கட்டப்பட்டுள்ள 4 நியாய விலைக்கடைகளைத் திறந்து வைத்தார்.




● திரு.வி.க.நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடங்களைத் திறந்து வைத்து, ரூ. 1.42 கோடி மதிப்பில் கட்டப்படவுள்ள கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டி நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.



● சென்னை கிழக்கு மாவட்டக்கழகம் சார்பில், நடைபெற்ற நிகழ்வில் கழக மூத்த உடன்பிறப்புகளுக்குப் பொற்கிழி மற்றும் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.